புதுச்சேரி அரசு
போக்குவரத்துத் துறை
***

எண். 04/போ.ஆ/போ.துறை/2014 தேதி :30-07-2014

## செய்திக் குறிப்பு

## வாகன ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள்

புதுச்சேரியில் இயங்கிவரும் வாகன ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளை முறைப்படுத்துதல் தொடர்பாக புதுச்சேரி அரசு போக்குவரத்துத் துறை புதுவையில் இயங்கும் அனைத்து வாகன ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளையும் ஆய்வுக்குட்படுத்த உள்ளது. அதன்படி, புதிதாக விண்ணப்பிக்கும் பயிற்சிப் பள்ளிகள் தற்போது நடைமுறையிலுள்ள மோட்டார் வாகனச் சட்டப்பிரிவின் கீழ் ஆய்வு செய்யப்பட்டு தகுதி உள்ளவர்களுக்கு மட்டும் உரிமம் வழங்கப்படுகிறது. மேலும் ஏற்கனவே உரிமம் பெற்று இயங்கிவரும் பயிற்சிப் பள்ளிகளும் மறு ஆய்வுக்குட்படுத்தப்பட்டு விதிமுறை மீறல்கள் கண்டுபிடிக்கப்பட்டால் அந்த உரிமங்கள் ரத்து செய்யப்படும்.

வாகன ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகள் மோட்டார் வாகனச் சட்ட விதிகளில் உள்ளவாறு கட்டமைப்பு வசதிகள் கொண்டதாக இருக்க வேண்டும். உரிமம் பெற்ற பயிற்சியாளர் மட்டுமே மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். பயிற்சிப் பள்ளிகளுக்கு அனுமதிக்கப்பட்ட வாகனத்தை மட்டுமே மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப் பயன்படுத்த வேண்டும். அனுமதிக்கு அதிகமாக சட்ட விரோதமாக பயன்படுத்தப்படும் வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டு அப்பள்ளியின் உரிமமும் ரத்து செய்யப்படும். மேலும் பயிற்சி வாகனங்கள் பயிற்சியில் ஈடுபடும்பொழுது அதற்குரிய உரிமத்தின் ஓர் நகல் அந்த வாகனத்தில் அவசியம் வைத்திருத்தல் வேண்டும். அந்த வாகனங்களில் உள்ள பள்ளியின் பெயர் பலகையில் அப்பயிற்சிப் பள்ளியின் உரிமம் எண் முதலியவை குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். இவை தவிர அந்த வாகனத்தில் அமர்ந்து பயிற்சிபெறுவோர் தமக்குரிய பழகுநர் உரிமத்தின் (LLR) நகல்களை கண்டிப்பாகத் தம்முடன் வைத்திருக்க வேண்டும்.

மேலும் உரிமம் பெற்ற பயிற்சியாளர் தமது வாகனத்தை போக்குவரத்திற்கு இடையூறாக ஆங்காங்கே நிறுத்தி வைத்தல் கூடாது. பயிற்சி வாகனத்தில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையைவிட அதிகமாக பயிற்சி மாணவர்களை ஏற்றிச் செல்லுதல் கூடாது. பெண்களுக்கென பிரத்யேகப் பெண் பயிற்சியாளர்களைக் கொண்டு பயிற்சி அளிக்க வலியுறுத்தப்படுகிறது.

அனைத்து வாகன ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளும் அவற்றிற்குரிய நெறிமுறைகளின்படி இயங்க வேண்டும். இதனை மீறும் பயிற்சிப் பள்ளி மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று புதுச்சேரி போக்குவரத்துத் துறை தெரிவித்துக்கொள்கிறது.

GOVT OF PONDICHERRY * TRANSPORT DEPARTMENT *

(எஸ்.டி. சுந்தரேசன்)
போக்குவரத்து ஆணையர்